கரிகணனின் இலவச வெளியீடு...



# துணிந்து நில்... எதையும் வெல்!

சுவாமி விவேகானந்தரின் உற்சாக முத்துகள்

# HARIKANAN

Printers of the North




Batch, Award Shield & Medal Creation




Gift Mug, Tile Printing




T-Shirt, Cap Embroidery




Job ID Card Printing




Cartoon Makers




General & Commercial Offset Printers



# நரேந்திரன், விவேகானந்தரான கதை!

கல்கத்தா மாநகரில் ராம்மோகன் தத்தர் புகழ்பெற்ற வழக்கறிஞராக விளங்கினார். சமூகத்தில் செல்வாக்கு, அளவற்ற செல்வம் என்று அனைத்தும் இருந்த அவருக்கு ஒரு மகன். பெயர் துர்காசரணர். தந்தையின் சொத்துகள் மீதும் அவருக்கு ஆசையில்லை. மனைவியிடமும் பற்று வைக்கவில்லை. மூன்று வயது நிரம்பிய ஒரு மகன் அவருக்கு. அந்த மகன் மீதும் பிடிப்பு இல்லை. திடீரென்று ஒரு நாள் வீட்டைவிட்டுச் சென்று துறவியாகிவிட்டார்!

துர்காசரணரின் மகனான விசுவநாத தத்தர் வளர்ந்தார். அவருக்கு இல்லறத்தில் நாட்டம் இருந்தது. புவனேசுவரி தேவி எனும் பெண்ணை மணந்தார்.

*1863 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் தேதியன்று* இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு நரேந்திரநாதர் என்று பெயர் சூட்டினர். நரேந்திரநாதர் செல்லமாக 'நரேந்திரன்' என்று அழைக்கப்பட்டான்.

நரேந்திரனிடம் குழந்தைப் பிடிவாதங்கள் நிறைய இருந்தன. கொஞ்சம் வளர்ந்த பின்பு நரேந்திரனின் குணம் வேறு விதமாக மாறியது. காவி உடை தரித்த சாதுவோ, பிச்சைக்காரரோ வீட்டுக்கு வந்து கையேந்தினால், வீட்டில் இருக்கும் விலையுயர்ந்த பொருட்களை எல்லாம் தூக்கிக் கொடுத்துவிடுவான்.

பிராணிகளிடமும் பறவைகளிடமும் எக்கச்சக்கக் காதல். பசுமாடு, ஆடு, குரங்கு, மயில், புறா, மூன்று சீமைப் பெருச்சாளிகள் ஆகியவை அவனது சிறுவயதுத் தோழர்கள்.

உரிய வயதில் நரேந்திரன் பாடசாலைக்கு அனுப்பப்பட்டான். பாடசாலையில், பாடங்களுடன் அவன் வயதுள்ள சகநண்பர்கள் பேசும் கெட்ட வார்த்தைகளையும் கற்றுக்கொண்டு வந்து வீட்டில் பயிற்சி செய்து பார்த்ததால், பாடசாலைப் படிப்பு தடைப்பட்டது. ஆசிரியர் ஒருவர் வீட்டுக்கு வந்து அவனுக்குப் பாடங்கள் சொல்லித் தரலானார்.

இறுதித் தேர்வு நேரத்தில் மளமளவெனப் பாடங்கள் அத்தனையையும் படித்து மிக உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்று விடுவான். அங்கொன்றும் இங்கொன்றுமாகச்



"நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய்
உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால்
வலிமை படைத்தவன் ஆவாய்!"



சில வரிகளைப் படித்தாலே புத்தகத்தில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களைப் புரிந்துகொள்ள நரேந்திரனால் முடிந்தது. இந்த அசாதாரண ஆற்றல் அவனிடம் இருந்தபடியால் அளவின்றிப் படிக்க முடிந்தது. இவ்வாறு நரேந்திரன் பி.ஏ. தேர்ச்சி பெற்றான்.

# துணிந்து நில்... எதையும் வெல்!

இளம் வயதிலேயே மனத்தை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் அவனுக்கு இருந்தது. எனவே, தியானம் செய்வது அவனுக்கு விளையாட்டாக இருந்தது.

சிறுவனாக இருந்தபோது ஒரு நாள் தன் நண்பர்களுடன் அறை ஒன்றில் நுழைந்து உள்ளே தாளிட்டுக் கொண்டு தியானம் செய்ய அமர்ந்தான். நீண்ட நேரமாக நரேந்திரனைக் காணாததால் வீட்டினர் அவனை எல்லா இடங்களிலும் தேடினார்கள். கடைசியாக, மூடியிருந்த அறைக்கு வந்தார்கள். கதவைத் தட்டினார்கள்; திறக்கவில்லை. அதனால் கதவை உடைத்து உள்ளே சென்றார்கள்.

நரேந்திரனின் நண்பர்கள் பயந்து எழுந்து ஓடிவிட்டார்கள். ஆனால், நரேந்திரனுக்குத் தன்னைச்சுற்றி நடப்பவை எதுவும் தெரியவில்லை. அவ்வளவு ஆழ்ந்த தியானத்தில் இருந்தான்.



(பின்னாட்களில் ஒரு நாள் நரேந்திரனின் குருவான பகவான் ராமகிருஷ்ணர், "நரேந்திரன் பிறப்பிலேயே தியானம் கைவரப் பெற்றவன்" என்று கூறி இருக்கிறார்.)

இரவில் நித்திரைக்காகக் கண்களை மூடினால் நரேந்திரனின் புருவங்களுக்கிடையே ஓர் ஒளிப்பந்து தோன்றும். அதில் தான் கரைந்து போவதை நரேந்திரன் உணர்வான்.

நித்திரையின் இயற்கையே இதுதான் என்றும், எல்லோரும் இப்படித்தான் நித்திரைகொள்வார்கள் என்றும் நரேந்திரன் நினைத்திருந்ததால், இந்த அனுபவம் அவனுக்கு ஓர் அதிசயமாகத் தோன்றவில்லை. ஆனால், இந்த அனுபவம் வேறு ஒன்றை உணர்த்தியது.

எல்லோரும் 'கடவுள், கடவுள்' என்று சொல்கிறார்களே... அந்தக் கடவுளைக் காணவேண்டும்

"உன்னால் சாதிக்க இயலாத
காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும்
நினைக்காதே!"



என்றால் அதற்குத் தியானம் ஒன்றுதான் வழி என்று அவனுக்குத் தோன்றியது. எனவே, அறையைத் தாளிட்டுக்கொண்டு மற்றவர்களுக்குத் தெரியாமல் தினமும் தியானப் பயிற்சியை அவன் செய்து வந்தான்.



**1877** ஆம் ஆண்டு நரேந்திரனுக்குப் பதினான்கு வயது. அப்போது நரேந்திரனின் தந்தை ராய்ப்பூரில் இருந்தார். அவரைப் பார்ப்பதற்காக நரேந்திரன் தன் தாயுடன் மாட்டு வண்டியில் சென்றான். நீண்ட பயணம்.

மாட்டு வண்டி அடர்ந்த காட்டு வழியாகச் சென்றது. இருபுறங்களிலும் மலைச் சிகரங்கள் வானளாவ உயர்ந்து இருந்தன. பூத்துக்குலுங்கிய மலர்களையும் செழிப்பான பழங்களையும் கொண்ட பல மரங்களும், கொடிகளும் மலைகளில் காணப்பட்டன. பறவைகள் ஆனந்தமாகப் பறந்து கொண்டிருந்தன. சில பறவைகள் தரையில் உணவு தேடிக் கொண்டிருந்தன.

அந்தப் பயணத்தின்போது வழியில் ஓரிடத்தில் இரண்டு மலைச்சிகரங்கள் ஒன்றையொன்று நெருங்கி வந்து அணைத்துக் கொள்வது போன்று காட்சியளித்தன. சிகரங்கள் சந்தித்துக் கொண்ட இடத்தில் ஒரு பெரிய தேன்கூடு. எவ்வளவு பெரிய தேன்கூடு தெரியுமா அது! ஆயிரக்கணக்கான தேனீக்கள் அந்த இடத்தில் ஒன்றுசேர்ந்து இந்தத் தேன்கூட்டை உருவாக்கியிருக்க வேண்டும்!

இறைவனின் சக்தியால்தான் இவ்வளவு தேனீக்கள் அவ்வளவு உயரத்தில் ஒன்றாக இணைந்து, இப்படிப்பட்ட தேன்கூட்டைக் கட்டியிருக்கின்றன என்ற எண்ணம் நரேந்திரனின் மனதில் தோன்றியது. அவ்வளவுதான். அடுத்த கணமே நரேந்திரன் புறஉலக நினைவை முற்றிலுமாக இழந்து பரவச நிலையை எய்தினான்.

அந்த வயதில் நரேந்திரன் எய்திய அந்த நிலையே, 'சமாதிநிலை' என ஞானிகளால் வரையறுக்கப்பட்டிருக்கிறது.



“நான் எதையும் சாதிக்க வல்லவன்! என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம்கூட சக்தியற்றதாகிவிடும்.”

**சி**று வயதிலிருந்தே தியானப் பயிற்சியை மேற்கொண்டிருந்ததாலும், பதினான்கு வயதில் பரவச நிலையை எய்தியதாலும் நரேந்திரனுக்குக் கடவுளை நேருக்குநேர் காண வேண்டும் என்ற ஆவல் தோன்றியது. நாளுக்கு நாள் அது அதிகரித்துக் கொண்டே வந்தது.

சமயப் பெரியோர்கள் யாரைக் கண்டாலும் அவர்களிடம், “நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா?” என்று நரேந்திரன் கேட்பது வழக்கமானது. எவராலும் திருப்தியான விடையை அவனுக்குக் கூற இயலவில்லை.

தட்சிணேசுவரத்தில் இருக்கும் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பார்த்தால் அவரது கேள்விக்கு விடை கிடைக்கக்கூடும் என்று சிலர் ஆலோசனை கூறினார்கள்.

*1881*ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஒருநாள் நரேந்திரன், சுரேந்திரநாத் மித்ரா என்பவருடன் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரைக் காணச் சென்றார்.

நரேந்திரனைப் பார்த்த ஸ்ரீராமகிருஷ்ணர் அவரை ஒரு பாயில் அமர்ந்து பக்திப் பாடல்களைப் பாடும்படி கூறினார். பாடும்போதே நரேந்திரன் பரவச நிலையை எய்தினார்.

பாடிமுடித்ததும் ஸ்ரீராமகிருஷ்ணர் அவரை ஒரு தனி அறைக்குக் கூட்டிச் சென்று கதவை மூடிக் கொண்டார். நரேந்திரனின் கைகளைப் பிடித்துக்கொண்டு, அளவற்ற மகிழ்ச்சியுடன் ஆனந்தக்கண்ணீர் வடித்தார். பின் நரேந்திரனை நோக்கி, “நான் உனக்காகக் காத்திருக்கிறேன் என்பதை ஒரு முறையாவது நினைத்துப்



பார்த்தாயா? இவ்வளவு காலம் கழித்து வந்திருக்கிறாயே. இது நியாயமா?" என்று கேட்டார். பின் தேம்பித் தேம்பி அழுதார். வெண்ணெய், இனிப்பு முதலியவற்றை நரேந்திரனுக்கு ஊட்டினார்.



நரேந்திரன் திகைத்தார். அவருக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் முழுப் பைத்தியமாகவே தென்பட்டார். இருந்தும் அந்தக் கேள்வியை ஸ்ரீராமகிருஷ்ணரிடமும் கேட்டார் : "நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா?"

அதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் பதில் அளித்தார். " கடவுளைக் கண்டிருக்கின்றேன். கடவுளைக் காணமுடியும். நான் உன்னைப் பார்த்து உன்னோடு பேசுவது போல் கடவுளைப் பார்க்கவும், கடவுளுடன் பேசவும் முடியும்! ஆனால், யார் கடவுளைப் பார்க்க விரும்புகிறார்கள்? யார் அவருடன் பேச ஆசைப்படுகிறார்கள்? மனிதர்கள் தங்களது வாழ்க்கைத் துணை அல்லது குழந்தைகள் இறந்துவிட்டால் குடம் குடமாகக் கண்ணீர்விட்டு அழுகிறார்கள். பணத்துக்காகவும் மனைவி மக்களுக்காகவும் அழுகிறார்களேயன்றி, யாராவது கடவுளைப் பிரிந்து இருக்க முடியவில்லை என்று அழுகிறார்களா? கடவுளைக் காணாமல் இருக்க முடியவில்லையே என்று ஏங்குகிறார்களா? ஒருவன் இறைவனைக் காண வேண்டும் என்று உண்மையாக ஏங்கி இறைவனை அழைத்தால் அவர் தன்னை அவனுக்குக் காட்டி அருள்கிறார்!"

ஸ்ரீராமகிருஷ்ணரின் இந்தப் பதிலே, நரேந்திரனை யோசிக்க வைத்தது.

ஒரு மாதம் கழித்து மீண்டும் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பார்க்கச் சென்றார் நரேந்திரன். அப்போது ஸ்ரீராமகிருஷ்ணர் தன் வலது காலை உயர்த்தி நரேந்திரனின் உடல் மீது வைத்தார்.



அவ்வளவுதான். நரேந்திரனின் எதிரில் இருந்த சுவர்களும், அறையும், அறையில் இருந்த எல்லாப் பொருட்களும் பயங்கர வேகத்தில் சுழல ஆரம்பித்து சூன்யத்தில் மறைந்தன.

நரேந்திரன் தானும் அந்தச் சுழற்சியில் கொஞ்சம் கொஞ்சமாக மறைவது போல் உணர்ந்தார். அதனால், தான் இறந்துவிடப் போவதாக எண்ணினார். பயந்து போய் “ஓ!” என்று அலறினார். “என்னை என்ன செய்கிறீர்கள்? வீட்டில் என் பெற்றோர் இருக்கிறார்கள்” என்று கத்தினார்.

உடனே ஸ்ரீராமகிருஷ்ணர், நரேந்திரனின் மார்பில் தன் கையை வைத்துத் தடவ, அந்த விநோதமான அனுபவம் மறைந்து நரேந்திரன் பழைய நிலையை அடைந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணரைப் பைத்தியம் என நினைத்த நரேந்திரன் இப்போது மிகவும் மதித்தார். ஆன்மிக வழிகாட்டியாக, குருவாக அவரை ஏற்றுக் கொண்டார்.

**1884** ஆம் ஆண்டு நரேந்திரனின் தந்தை விசுவநாத தத்தர் மறைந்தார். வீட்டுக்குத் தலைமகனான

“பலமே வாழ்வு! பலவீனமே மரணம், மிகப்பெரிய உண்மை இது!”

## சகலத்தையும் துறந்த தோற்றம்!



விவேகானந்தர் ஒரு முறை இலங்கையிலிருந்து சென்னை வந்து சில நாட்கள் தங்கியிருந்தார்.

சென்னை, திருவல்லிக்கேணியைச் சேர்ந்த அப்பாவு முதலியார் என்பவர், அப்போது பெயர் பெற்றிருந்த பிரபலமான ஒரு புகைப்பட நிபுணர். விவேகானந்தரின் பக்தர். அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கி, விவேகானந்தர் அளித்த தோற்றம் இது.



ஸ்ரீராமகிருஷ்ணர்



சாரதாதேவி அம்மையார்

நரேந்திரனின் தலையில் குடும்பப் பொறுப்பு விழுந்தது. ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குடும்பத்தில் நரேந்திரன் ஒருவரே பி.ஏ படித்துச் சம்பாதிக்கும் நிலையில் இருந்தார். எனவே, குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக வேலை தேடி அலைந்தார். வேலை கிடைக்கவில்லை. குடும்பம் வறுமையில் உழன்றது.

ஸ்ரீராமகிருஷ்ணரின் பிரார்த்தனையை ஏற்று, காளி அவருக்கு அருள் புரிவதை நரேந்திரன் நன்கு உணர்ந்திருந்தார். எனவே, தட்சிணேசுவரம் சென்று ராமகிருஷ்ணரைச் சந்தித்தார். காளியை வேண்டி தன் குடும்பத்துக்கு உதவுமாறு பிரார்த்தனை செய்யச் சொன்னார். ஸ்ரீராமகிருஷ்ணரோ, "நரேன் நீயே அன்னையிடம் பிரார்த்தனை செய்" என்று நரேந்திரனிடம் கூறினார்.

நரேந்திரன் கோயிலுக்குள் நுழைந்தார். காளியைப் பார்த்த மாத்திரத்திலேயே பரவச நிலையை எய்தினார். அப்போது தன் குடும்பத்தின் வறுமையை அகற்றுமாறு காளியிடம் வேண்டிக்கொள்ள அவரால் முடியவில்லை.

குடும்பத்துக்காக வேண்டாமல் திரும்பி வந்த நரேந்திரனை மறுபடி காளியிடமே அனுப்பி வைத்தார் ராமகிருஷ்ணர். அடுத்த முறையும், அதற்கடுத்த முறையும் நரேந்திரன் பரவச நிலையை எய்தினாரேயொழிய, அவரால் குடும்பத்துக்காக வேண்டிக் கொள்ள முடியவில்லை.

கடைசியில் ஸ்ரீராமகிருஷ்ணரே, "நரேந்திரனின் குடும்பத்தினருக்கு உணவுக்கும் உடைக்கும் ஒருபோதும் பஞ்சம் வராது" என்ற வரத்தை அருளினார்.



1885 ஆம் ஆண்டின் இடையில் ஸ்ரீராமகிருஷ்ணருக்குத் தொண்டையில் புற்றுநோய் ஏற்பட்டது. நரேந்திரன் அவருக்குச் சேவைகள் பல புரிந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் ஒருநாள் நரேந்திரனை அருகில் அழைத்து அமர வைத்தார். நரேந்திரனைக் கூர்ந்து நோக்கிய வண்ணம் சமாதியில் ஆழ்ந்தார். அந்தச் சமயத்தில் மகத்தானதொரு தெய்வசக்தி தமக்குள் நுழைந்து பரவுவதை நரேந்திரன் உணர்ந்தார். அவ்வளவு தான். நரேந்திரன் தன் நினைவை இழந்தார். மீண்டும் அவருக்கு நினைவு வந்தபோது, ஸ்ரீராமகிருஷ்ணர் அவரைக் கனிவுடன் நோக்கி, "ஓ, நரேன். இதுநாள்வரை நான் சேமித்து வைத்திருந்த சக்தியையெல்லாம் இன்று உனக்கு அளித்து நான் எதுவுமற்ற பிச்சைக்காரனாகி விட்டேன். இன்று உனக்கு அளிக்கப்பட்ட சக்தியைக் கொண்டு மகத்தான காரியங்களை நீ இந்த உலகத்தில் சாதிக்கப் போகிறாய். அதன்பின்தான், எங்கிருந்து நீ வந்தாயோ, அங்கு திரும்புவாய்!" என்று கூறினார்.

தனக்குச் சேவை செய்து கொண்டிருந்த மற்ற இளைஞர்களையும் நரேந்திரனின் பாதுகாப்பில் ஒப்படைத்தார் ராமகிருஷ்ணர்.

"கீழ்ப்படிவதற்குக் கற்றுக்கொள். கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்து அடையும்!"

*1886 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் நாள் ஸ்ரீராமகிருஷ்ணர் தனது உடலைவிட்டு நீங்கினார்.*



*நரேந்திரன் மற்ற இளைஞர்களை ஒன்று திரட்டி ஒரு சங்கம் அமைத்தார். பல புண்ணியத்தலங்களைத் தரிசிக்கவும், தனிமையான இடத்தில் தவ வாழ்க்கை வாழவும் நரேந்திரன் 1888ஆம் ஆண்டு கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டார்.*



இமயம் முதல் குமரி வரை சுற்றித் திரிந்து மக்களுடன் நன்கு பழகினார். அரசன் முதல் குடியானவன் வரையிலும், பண்டிதர் முதல் பாமரன் வரையிலும் எல்லோரையும் ஒன்றாகப் பாவித்துப் பழகினார். கோடிக்கணக்கான மக்களின் வேதனைகளை நேரில் கண்டார்.

இந்தியா முழுவதும் பயணம் செய்து மக்களுடன் நன்கு பழகி, அவர்களுடைய துன்பங்களை எல்லாம் தெரிந்து கொண்டதுதான் நரேந்திரனை, சுவாமி விவேகானந்தராக மாற்றியமைத்தது.

தவத்தை மேற்கொண்ட சந்நியாசியான நரேந்திரன், தேச பக்தராக, மனித சமுதாயத்தில் அக்கறை கொண்டவராக, உலகுக்கு ஆன்மிகத்தைப் போதிப்பவராக, சுவாமி விவேகானந்தராக மாறினார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அமெரிக்காவின் சிகாகோ நகரில் சர்வமத மகாநாடு ஒன்று நடக்க இருந்தது. சுவாமி விவேகானந்தர் மீது அளவற்ற அன்பு கொண்ட தமிழக மக்கள், குறிப்பாகச் சென்னை மக்கள் சுவாமி விவேகானந்தரை சர்வமத மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொண்டனர். அவர் பயணம் மேற்கொள்வதற்காகச் சென்னை பக்தர்கள் நாலாயிரம் ரூபாய் நிதி திரட்டி வழங்கினர்.

1893ஆம் ஆண்டு மே மாதம் 31-ஆம் தேதி சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவை நோக்கிக் கப்பலில் தனது பயணத்தைத் தொடங்கினார்.

திட்டமிட்டபடி சிகாகோ மாநாட்டில் கலந்துகொண்டார். அந்த நாட்களில் ஆங்கிலேயர்கள், 'சீமான்களே, கனவான்களே, சீமாட்டிகளே!' என்று கூட்டத்தினரை அழைத்துப் பேச்சைத் தொடங்குவது வழக்கம்.

தன் முறை வந்தபோது சுவாமி விவேகானந்தர், "சகோதரர்களே, சகோதரிகளே..." என்று மக்களை அழைத்துப் பேச்சைத் தொடங்கினார். இந்த இரண்டு வார்த்தைகளும் மந்திர வார்த்தைகளாக மக்களைக் கொள்ளைகொண்டன. கூட்டம் அவர் பேசுவதைக் கவனிக்கத் தொடங்கியது. அவர்களுக்கிடையே சுவாமி விவேகானந்தர் இந்து மதத்தின் மேன்மையை எடுத்துரைத்தார்.



இந்து மதத்தைப் பற்றிய அவரது வலிமையான சொற்பொழிவு கூடியிருந்த மக்களை மந்திரத்தால் கட்டுண்டது போல் கட்டிப் போட்டது. ஒரு சில வார்த்தைகளால் ஒரு புதிய வரலாற்றையே சுவாமி விவேகானந்தர் உருவாக்கிவிட்டார்.

'சொற்பொழிவு நிகழ்த்துவதற்காகத் தெய்வத்திடம் இருந்து ஆணை பெற்று வந்தவர் விவேகானந்தர்!' என்று பத்திரிகைகள் விவரித்தன. அவருடன் சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்ளும் வகையில் ஒருமுறை கை குலுக்க ஆண்கள்-பெண்கள் என அனைவரும் முட்டி மோதினர். சுவாமி விவேகானந்தர் 1893ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் நாள் உலகப் புகழ் பெற்றவராக மாறினார்.

சுமார் இரண்டு வருடங்கள் அமெரிக்காவின் பல்வேறு இடங்களில் சொற்பொழிவாற்றிவிட்டு 1895ஆம் ஆண்டு லண்டன் சென்றார். அதன்பின் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்கும் சென்று சொற்பொழிவாற்றினார்.

1896ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் லண்டனில் இருந்து இந்தியாவை நோக்கிப் புறப்பட்டார். இந்தியா வந்ததும் ஆங்காங்கே படிப்படியாக ஸ்ரீராமகிருஷ்ண மடங்களை நிறுவி சமூகப் பணி ஆற்றத் திட்டமிட்டார்.

"உற்சாகத்துடன் இருக்கத் தொடங்குவதுதான் வெற்றிகரமான வாழ்க்கை வாழத் தொடங்குவதற்கான முதல் அறிகுறி."

### லண்டனில்...

விவேகானந்தர் லண்டன் மாநகரில் உரையாற்றியபோது, லண்டனைச் சேர்ந்த 'வாலரி போட்டோகிராஃபர்ஸ்' என்னும் புகைப்பட நிறுவனம், அவரை வேறுவிதமாகச் சித்திரித்துக் காட்ட விரும்பியது. லண்டனில் அப்போது பிரபலமாக இருந்த ஒரு தொப்பியை அவருக்கு அணிவித்துப் புகைப்படங்களாகச் பதிவுசெய்து பத்திரிகைகளுக்கு அனுப்பியது. அந்தப் புகைப்படங்களில், விவேகானந்தரின் இந்தத் தோற்றம் தனிக் கவனத்தைப் பெற்றது!



கரிகணனின் இலவச வெளியீடு

*1899* ஆம் ஆண்டு கல்கத்தாவில், பேலூரில், கங்கைக்கரையில் முதன் முதலாக ஸ்ரீராமகிருஷ்ண மடம் தோன்றியது. அங்கே ராமகிருஷ்ணரின் அஸ்தியை வைத்துக் குருதேவருக்கென ஒரு கோயிலை எழுப்பினார். பின்னர் சென்னையில் ராமகிருஷ்ண மடம் உருவானது. தொடர்ந்து இலங்கை, அமெரிக்கா, லண்டன் என்று பல இடங்களிலும் ராமகிருஷ்ண மடங்கள் தோன்றின.



இந்த மடங்கள் அந்தந்தப் பகுதிகளில் பஞ்சகாலத்திலும் பிளேக் போன்ற கொடிய நோய்கள் மக்களைத் தாக்கியபோதும் நிவாரணப் பணிகளைச் செய்தன.

இந்தப் பணிகளுக்கிடையே சுவாமி விவேகானந்தர் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று இந்து மதத்தின் மேன்மையை எடுத்துச் சொன்னார். மக்கள் எப்படி வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டும் என்று எடுத்துரைத்தார்.

*1899*ஆம் ஆண்டு ஜூன் மாதம் மீண்டும் ஒருமுறை கப்பல் மூலம் சென்னை - கொழும்பு - லண்டன் வழியாக அமெரிக்கா சென்றார். சான்ஃபிரான்சிஸ்கோ, ஸான் அண்டோன், பார்ீஸ் என்று பல மேலைநாடுகளில் உரையாற்றினார். ஆசிரமங்களை நிறுவினார்.

*1900*டிசம்பரில் இந்தியா திரும்பினார்.

*1902*ஜூலை மாதம் நான்காம் தேதி வரை பேலூர் மடத்தில் வாசம் செய்தார். இந்த இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் பல இடங்களுக்கும் சென்றார்.

தன் பெயரில் இருந்த அத்தனை சொத்துக்களையும் சீடர்களின் பெயர்களுக்கு மாற்றினார். தனது பொறுப்புக்கள் அனைத்தையும் சீடர்களிடம் ஒப்படைத்தார்.



கடினஉழைப்பு, இடைவிடாத சுற்றுப்பயணம் போன்றவை அவர் உடல்நலனுக்குக் கேடு விளைவித்தன. நீரிழிவு நோய் அவரைத் தாக்கியது. ஆஸ்துமா பாடாய்ப் படுத்தியது.

சுவாமி விவேகானந்தர் தன் உடலைவிட்டுப் போக முடிவு செய்தார். பஞ்சாங்கத்தைப் பார்த்து ஜூலை மாதம் நான்காம் தேதியே அதற்குச் சரியான நாள் என்று தீர்மானித்தார்.

1902 ஜூலை மாதம் நான்காம் தேதி.

அன்று அதிகாலையில் சுவாமி விவேகானந்தர் எழுந்தார். பூஜையறை சென்று அதன் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடிவிட்டு மூன்று மணி நேரம் தியானம் செய்தார். பின்னர் சிறிது நேரம் தோட்டத்தில் உலாவினார்.

பல நாட்களாகத் தன் அறையிலேயே உண்டு வந்த சுவாமி விவேகானந்தர் அன்று தன் சீடர்கள் மற்றும் ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடர்களுடன் சேர்ந்து உணவு உண்டார்.

பிற்பகல் ஒரு மணியிலிருந்து நான்கு மணி வரை பிரம்மச்சாரிகளுக்கு வடமொழி இலக்கண வகுப்பு எடுத்தார்.

மாலையில் இரண்டு மைல் தூரம் உலாவி விட்டுத் திரும்பினார். மடத்தில் சாதுக்களுடன் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

மாலை பூஜைக்கான மணி ஒலித்தது.

விவேகானந்தர் தன் அறைக்கு வந்தார். ஒரு மணி நேரம் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். தியானம் முடிந்ததும் தரையில் விரித்திருந்த படுக்கையில் கால்களை நீட்டிப்



“அடிமைகளின் குணமாகிய பொறாமைதான் நமது நாட்டின் அழிவுக்கே காரணமாக அமைந்துள்ளது.”

படுத்தார். சீடரை அருகில் அழைத்துத் தலைக்கு விசிறும்படி கூறினார்.

சீடர் சுமார் ஒரு மணி நேரம் விசிறினார். அவர் சுவாமி விவேகானந்தரையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

சுவாமி விவேகானந்தரின் கைகள் சிறிது நடுங்கின. அதன்பின் விவேகானந்தர் இருமுறை ஆழ்ந்த பெருமூச்சு விட்டார்.

அவ்வளவுதான்... தன் உடலை உதிர்த்துச் சென்றுவிட்டார். அப்போது இரவு மணி ஒன்பது.

சுவாமி விவேகானந்தர் தம் உடலை உகுத்தபோது அவருக்கு முப்பத்தொன்பது ஆண்டுகளும், ஐந்து மாதங்களும், இருபத்து நான்கு நாட்களும் (வயது) ஆகியிருந்தன.

## இல்லறமா, துறவறமா? எது சிறந்தது?

இல்லறமா? துறவறமா? எது மேலானது? எது சிறந்தது? இல்வாழ்க்கையா? சந்நியாச வாழ்க்கையா? எது பெரிது? வீடா? மடமா?

விவேகானந்தர் ஓர் அற்புதமான கதை மூலம் இந்தக் கேள்விக்கு, யாராலும் மறுக்க முடியாத, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆணித்தரமான பதிலை அளித்திருக்கிறார்.

ஓர் அரசன் தன் நாட்டுக்கு வருகிற துறவிகளிடம் எல்லாம், 'உலகில் உயர்ந்தது எது - துறவறமா? இல்லறமா?' என்று கேட்பது வழக்கம்.



நிறையப் பேர் அரசனுக்குப் பதில் கூறினார்கள். ஆனால், அரசனின் மனம் திருப்தி அடையவில்லை.

ஒரு நாள் அரசனைத் தேடி வயது முதிர்ந்த அனுபவத் துறவி ஒருவர் வந்தார். அவரிடமும் அரசன் தன் வழக்கமான கேள்வியைக் கேட்டான்.

அதற்கு அந்தத் துறவி, "அரசே! நீங்கள் என்னுடன் வந்து நான்



“மிருக பலத்தால் அல்லாமல், ஆன்மிக பலத்தால் மட்டுமே இந்தியா எழுச்சி பெறப் போகிறது.”





வாழ்வதுபோல் சில நாட்கள் வாழ்ந்தால் சரியான பதில் கிடைக்கும்!” என்றார்.

அரசனும் அதை ஏற்று அந்தத் துறவியுடன் புறப்பட்டான்.

இருவரும் பல நாட்கள் நடந்து ஒரு பெரிய நாட்டை அடைந்தார்கள்.

அப்போது அந்த நாட்டில் எங்கு பார்த்தாலும் வாத்திய இசையும், பாட்டும், ஆரவாரமுமாக ஒலித்துக் கொண்டிருந்தன. கண்களைப்

பறிக்கும் வண்ண வண்ண உடைகளில் மக்கள் கூடியிருந்தனர். அந்த நாட்டின் இளவரசிக்கு சுயம்வரம் நிகழ்ந்து கொண்டிருந்தது. சுயம்வர மண்டபத்துக்கு அரசனும் அனுபவத்துறவியும் சென்றனர்.

இளவரசி உலகிலேயே பேரழகு வாய்ந்தவளாக இருந்தாள். அவளை மணந்துகொள்பவன் அவள் தந்தைக்குப் பிறகு அந்த நாட்டின் அரசன் ஆவான். அவள் பேரழகன் ஒருவனை மணக்க விரும்பினாள்.

பிரமாண்டமான சுயம்வர மண்டபத்தில் அரசகுமாரர்கள் பலர் கூடியிருந்தனர். ராஜகுமாரி பல்லக்கில் அமர்ந்து ஒவ்வோர் அரசகுமாரனாகப் பார்த்தாள். அங்கிருந்த எவரையும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

அப்போது மண்டபத்தில் இளந்துறவி ஒருவர் நுழைந்தார். கம்பீரமும் அழகும் நிறைந்த அவர் அங்கே வந்தது, சூரியனே வானத்தை விட்டுப் பூமிக்கு வந்தது போல் இருந்தது. வந்தவர் மண்டபத்தின் ஒரு மூலையில் நின்றபடி அங்கே என்ன நடக்கிறது என்று கவனித்துக் கொண்டிருந்தார்.


அவர் அருகே வந்த இளவரசி, இளந்துறவியின் அழகில் தன்னைப் பறிகொடுத்துக் கையிலிருந்த மாலையை அவர் கழுத்தில் சூட்டினாள்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத இளம்துறவி அதிர்ச்சி அடைந்து, "என்ன முட்டாள்தனம் இது? நான் ஒரு துறவி. எனக்கென்ன திருமணம்?" என்று கூறி மாலையைக் கழற்றிக் கீழே எறிந்தார்.



இதைக் கண்ட இளவரசியின் தந்தையான அரசர், "என் மகளை மணந்து கொண்டதும் இந்த நாட்டில் பாதி உனக்குச் சொந்தமாகும். நான் இறந்த பிறகோ முழு நாடும் உனக்கே!" என்று கூறி மாலையை எடுத்து மறுபடியும் அந்த இளம்துறவியின் கழுத்தில் போட்டான்.

துறவியோ மீண்டும் மாலையைக் கழற்றி வீசி எறிந்து, "இது சரியான மடத்தனம்! திருமணம் செய்துகொள்ள நான் விரும்பவில்லை!" என்று கூறிவிட்டுச் சட்டென்று அந்த மண்டபத்திலிருந்து வெளியேறினார்.





இதற்குள் இளவரசி அந்தத் துறவியிடம் அளவற்ற காதல் கொண்டு விட்டாள். "ஒன்று நான் அவரை மணந்து கொள்ள வேண்டும், அல்லது உயிரை விடவேண்டும்" என்று கூறியபடியே அவரைத் திரும்ப அழைத்து வருவதற்காக அவர் பின்னாலேயே சென்றாள்.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த நமது அனுபவத்துறவி, தான் அழைத்து வந்த அரசனைப் பார்த்து, "மன்னா... நாம் அந்த இருவரையும் பின்தொடர்ந்து செல்வோம்" என்று கூறினார்.

இளவரசி தங்களைப் பார்த்து விடாதபடி, இருவரும் அவர்களைத் தொடர்ந்து சென்றனர்.

இளவரசியை மணக்க மறுத்த இளந்துறவி நகரத்தை விட்டு விலகி ஒரு காட்டுக்குள் நுழைந்தார். இளவரசியும் பின்தொடர்ந்தாள். நமது அனுபவத்துறவியும் அரசனும் அவர்கள் பின்னாலேயே சென்றனர்.

இளந்துறவிக்கு அந்தக் காடும், புதர்களும் முட்களும் மண்டிய குறுக்குப்பாதைகளும் பழக்கமானவையாக இருந்தன. சட்டென்று அவற்றுள் ஏதோ ஒரு வழியில் நுழைந்து மறைந்துவிட்டார்.

இளவரசியால் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. காடு முழுவதும் அலைந்து திரிந்தாள். இளந்துறவியும் கிடைத்தபாடில்லை. காட்டைவிட்டு

"சுயநலமின்மை, சுயநலம் என்பவற்றைத் தவிர கடவுளுக்கும், சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை."

வெளியேறவும் வழி தெரியவில்லை. இந்நிலையில் ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து அழ ஆரம்பித்தாள்.

அப்போது அனுபவத்துறவி அரசனுடன் அவளருகில் சென்று, "ராஜகுமாரி! அழாதே. நீ வெளியே செல்ல நாங்கள் வழிகாட்டுகிறோம். இப்போது மிகவும் இருட்டி விட்டதால் வழிகாண்பது சிரமம். இதோ, பெரிய மரம் ஒன்று உள்ளது. இதன் அடியில் இன்றிரவு தங்கலாம். காலையில் உனக்கு வழிகாட்டுகிறோம்" என்றார்.

அந்த மரத்தில் ஓர் ஆண்குருவி, தன் இணையான பெட்டைக் குருவியுடனும், மூன்று குஞ்சுகளுடனும் ஒரு கூட்டில் வாழ்ந்து வந்தது.

ஆண்குருவி மரத்துக்குக் கீழே வந்து தங்கிய மூவரையும் பார்த்துத் தன் மனைவியான பெட்டைக்குருவியிடம், "அன்பே... இப்போது என்ன செய்வது? நம் வீட்டுக்குச் சில விருந்தினர் வந்துள்ளனர். இது குளிர்காலம் வேறு. நெருப்புக்கூட இல்லையே" என்று கவலையுடன் கூறிவிட்டு எங்கோ பறந்து சென்று, எரிந்து கொண்டிருந்த ஒரு சுள்ளியைக் கொண்டுவந்து அந்த மூவருக்கும் முன்னால் போட்டது. அவர்கள் மேலும் சில சுள்ளிகளைச் சேர்த்துத் தீயை வளர்த்துக் குளிர் காய்ந்தார்கள்.

அப்போதும் ஆண்குருவிக்கு மனநிறைவு ஏற்படவில்லை. மீண்டும் அது தன் மனைவியைப் பார்த்து, "அன்பே, அவர்கள் பசியோடு இருக்கிறார்கள். அவர்களுக்கு நம்மால் எதுவும் கொடுக்க முடியவில்லையே. நாமோ இல்லறத்தினர். வீடு தேடி வருபவர்களின் பசியைத் தீர்ப்பது நம் கடமை. எனவே என்னால் முடிந்ததை நான் செய்தாக வேண்டும். என் உடலை அவர்களுக்கு உணவாகத் தருகிறேன்" என்று கூறியபடி அவர்கள் வளர்த்திருந்த நெருப்பில் பாய்ந்து உயிரை விட்டது.



மரத்தடியில் அமர்ந்திருந்தவர்கள் குருவி விழுவதைப் பார்த்துத் தடுக்குமுன் அது நெருப்பில் வீழ்ந்துவிட்டது.

பெட்டைக்குருவி யோசித்தது. "வந்திருப்பதோ மூவர். ஒரு சிறு பறவையின்



“நீ செய்த தவறுகளை வாழ்த்து. அந்தத் தவறுகளே, நீ அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன.”

உடல் எப்படி அவர்களது பசியைத் தீர்க்கும்? அது போதாது. கணவனின் முயற்சி வீணாகாமல் காப்பது மனைவியான என் கடமை. அவர்களுக்கு என் உடலும் கிடைக்கட்டும்” என்று கூறித் தானும் தீயில் விழுந்தது.

நடந்தவற்றை மூன்று குஞ்சுகளும் கண்டன. “நம் பெற்றோர் தங்களால் முடிந்ததைச் செய்தார்கள். அப்படியும் உணவு போதாது. பெற்றோரின் பணி தொடர்வது நம் கடமை. நமது உடலும் போகட்டும்” என்று பேசியபடியே மூன்றும் அந்த நெருப்புக்குள் வேகமாக வீழ்ந்து இறந்தன.

நடந்ததைக் கண்டு திகைத்த மூவருக்கும் குருவிகளின் உடல்களைத் தீண்டக்கூட மனம் வரவில்லை. உணவு இன்றி இரவைக் கழித்தார்கள். பொழுது விடிந்ததும் இளவரசியை அவளது தந்தையிடம் அனுபவத்துறவியும் அரசனும் கொண்டு சேர்த்துவிட்டு வெளியே வந்தனர்.

பின்னர் அனுபவத்துறவி அரசனிடம், “மன்னா. நீ இல்லறத்தானாக வாழ விரும்பினால் இந்தப் பறவைகளைப் போல் எந்த விநாடியும் பிறருக்காக உன்னைத் தியாகம் செய்யத் தயாராக வாழவேண்டும். உலகைத் துறந்து வாழ விரும்பினால் மிக அழகான பெண்ணையும், பேரரசையும் துரும்பென உதறிச் சென்ற அந்த இளந்துறவியைப் போல் இருக்கவேண்டும். இல்லறமும் சரி, துறவறமும் சரி. அவற்றுக்கான தர்மத்தில் இருந்து





நழுவாதிருந்தால் இரண்டுமே உயர்ந்தவை!" என்றார்.

விவேகானந்தர் கூறுகிறார்:

"இல்லறத்தானாக வாழ விரும்பினால் உன் வாழ்வை மற்றவர்களின் நன்மைக்காக ஒரு பலியாக அர்ப்பணித்துவிடு.

துறவு வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்தால் அழகையோ, பணத்தையோ, பதவியையோ ஏறெடுத்தும் பார்க்காதே.

அவரவர் நிலையில் அவரவர் பெரியவரே."

### வெற்றிபெற தியானம் செய்!

**வெ**ற்றியை விரும்பும் மனிதர்கள் நிச்சயம் தியானம் செய்தே ஆகவேண்டும்.

எப்படித் தியானம் செய்வது?

மூன்று விஷயங்களில் கவனமாக இருந்தால் போதும்; தியானம் எளிதில் கைகூடும்.

முதலாவது உடலிலும் உள்ளத்திலும் தூய்மை. விளக்குவதற்கு அவசியமின்றிப் புரிகிற விஷயம் இது.

இரண்டாவது பொறுமை.

தியானம் செய்யத் தொடங்கும் யாருக்கும் முதலில், மனதில் ஆச்சரியமான காட்சிகள் எல்லாம் உண்டாகும். பின்னர் அவை அனைத்தும் நின்றுவிடும். மனம் நம்மைச் சோதிக்கும் காலம் இது. இந்த நேரத்தில் உறுதியாக இருங்கள். பொறுமையுடன் இருங்கள். இறுதியில் உங்களுக்கு வெற்றி உறுதி.

மூன்றாவது விடாமுயற்சி.

எந்த் நிலையிலும், நல்ல காலத்திலும், கெட்ட காலத்திலும், உடல் நலமாக இருக்கும் போதும், நோயுற்று இருக்கும்போதும் தியானப் பயிற்சியை ஒரு நாளும் தவறவிடக் கூடாது.



“மற்றவர்களுக்கு நன்மை செய்வது புண்ணியம்;
தீமை செய்வது பாவம்!”



தியானப் பயிற்சிக்கு மிகச் சிறந்த காலம் பகலும், இரவும் ஒன்று கூடும் அந்திவேளையே. இந்த நேரத்தில் நம் உடலின் அலைகள் மிக அமைதியாக இருக்கின்றன.

ஒரு பாய், அதன்மீது ஒரு பட்டுத்துணி ஆகியவை தரையில் இட்டு அவற்றின் மீது அமர்ந்து தியானம் செய்ய வேண்டும். முதுகைச் சாய்க்க ஒன்றும் இல்லாதிருப்பது நல்லது.

தலையும், தோள்களும், இடுப்பும் நேர்க்கோட்டில் இருக்கும் வண்ணம் நிமிர்ந்து அமர வேண்டும். அதேசமயம் முதுகெலும்பைத் தளர்ந்த நிலையிலேயே வைத்திருக்க வேண்டும். நேராக அமர்கிறேன் என்று முதுகெலும்பின் மீது அநாவசியமாக அழுத்தத்தைக் கொடுக்கக்கூடாது.

கால் விரல்களில் இருந்து தொடங்கி, உங்கள் உடலின் ஒவ்வொரு பகுதியும் முழுமையாக இருப்பதாக நினையுங்கள். இவ்வாறு ஒவ்வொரு பகுதியையும் முழுமையானதாகவும் ஒரு குறையும் அற்றதாகவும் நினைத்தவண்ணம் தலைப்பகுதி வரை மேலேற வேண்டும். பின் முழு உடலும் முழுமையாக இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள்.

இதைச் செய்து முடித்ததும் இரு நாசிகள் வழியாகவும் மூச்சை நீளமாக உள்ளிழுத்து, பின் அதை வெளியே விடவேண்டும். மூச்சு வெளியேறியவுடன் உடல் தாங்கும்வரை மூச்சை உள்ளிழுக்காமல் வெளியே நிறுத்தி வைக்கவேண்டும். இவ்வாறு நான்கு முறை மூச்சுப் பயிற்சி செய்யுங்கள்.

அதன்பின் பிரார்த்தனை: 'இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த பரம்பொருளின் மகிமையைத் தியானிக்கிறேன். அவர் என் உள்ளத்தை ஒளிரச் செய்வாராக...'

திரும்பத் திரும்ப இதே பிரார்த்தனையை மனதுக்குள் சொல்லியபடி பதினைந்து நிமிடங்கள் தியானம் செய்யவேண்டும்.

மனத்தை உங்கள் முன் பரந்து கிடக்கும் அமைதியான ஒரு பெரிய குளமாகவும், வந்துபோகும் எண்ணங்கள் நீரின் அடியிலிருந்து மேற்புறத்துக்கு வந்து உடைந்து போகின்ற நீர்க்குமிழிகளாகவும் கற்பனை செய்யவேண்டும்.

எண்ணங்களை அடக்க முயற்சி செய்யக்கூடாது. அவை தானாகவே எழும்பி அடங்கும் இயல்புடையவை.

'நான் மனம் அல்ல. நான் சிந்திப்பதை நானே உணர்கிறேன். என் மனம் செயல்படுவதைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன்' என்ற கருத்தை நாம் உறுதியாகப் பற்றிக்கொண்டால் இறுதியில் மனம் வேறு, நாம் வேறு என்பதை உணரமுடியும்.

இந்த நிலையை அடைந்துவிட்டால், மனம் என்பது உங்கள் அடிமையாக மாறும்.

### தலைப்பாகை வந்த கதை!

பாலைவனங்கள் மிகுந்த ராஜஸ்தான் மாநிலத்தில் வெப்பம் மிக அதிகம். வெயிலின் கடுமை மக்களை 'லூ' என்னும் நோயின் வடிவில் தாக்கியது. இந்த நோயிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காகத் தலையில் பெரிய தலைப்பாகைகளைச் சுற்றிக் கொண்டார்கள் மக்கள். ராஜஸ்தான் மாநிலத்துக்கு விவேகானந்தர் சென்றபோது, அவரை 'லூ' நோய் தாக்காமல் இருக்க, ராஜஸ்தானின் அரசர் அவரைத் தலைப்பாகை ஒன்றைக் கட்டிக்கொள்ளச் சொன்னார். விவேகானந்தரும் ஒப்புக்கொண்டார்.



அரசரே விவேகானந்தருக்குத் தலைப்பாகை கட்டிவிட்டார். 'எப்படித் தலைப்பாகை கட்டுவது?'என்பதையும் கற்றுத் தந்தார். அன்று முதல் இந்தத் தலைப்பாகை, விவேகானந்தரின் தனிப்பட்ட அடையாளமாக மாறியது!

அதன்பின் நீங்கள் விரும்புவது எதுவாக இருந்தாலும் அதை எளிதில் வெற்றிகொள்ள இயலும்!

**பிராணாயாமம் பழகுங்கள்!**

பிராணாயாமம் என்பது நாம் சுவாசிக்கும் மூச்சை அடக்கி ஆளுதல். நாம் சுவாசிக்கும் மூச்சானது, முதலில் சுவாசப்பையை இயக்குகிறது. சுவாசப்பை இதயத்தை இயக்குகிறது. இதயம் ரத்த ஓட்டத்தை இயக்குகிறது. இது முறையாக மூளையை இயக்க, மூளை மனத்தை



"அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும்."


### கொழும்பில் கோலாகலம்!

சிகாகோ, நியூயோர்க், லண்டன் போன்ற பல மாநகரங்களில் உரையாற்றி, இந்தியா மற்றும் இந்து மதத்தின் மேன்மையைப் பற்றி விவேகானந்தர் எடுத்துச் சொன்ன பிறகுதான், உலக அரங்கில் இந்தியா ஓர் ஆன்மிக நாடாக உணரப்பட்டது. தாய்த்திருநாட்டின் புகழைப் பரப்பிவிட்டு, அவர் இந்தியா திரும்பினார். முதலில் அவர் வந்து சேர்ந்த இடம் - கொழும்பு. அங்கு அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இலங்கை மக்கள், தங்களையும் இந்தியர்களாகக் கருதி விவேகானந்தரைத் தோளில் சுமந்து கொண்டாடினார்கள். இந்தியாவிலும் விவேகானந்தரே எதிர்பாராத அளவுக்கு, அவருக்கு மகத்தான வரவேற்பு காத்திருந்தது! அதிலும் குறிப்பாகச் சென்னை மக்கள் பிரமாண்டமான வரவேற்பு ஏற்பாடுகளுடன் அவரைக் காண துடித்துக் கொண்டிருந்தார்கள்.



1897, ஜனவரி 15 முதல் ஜனவரி 19 வரை கொழும்பில் தங்கியிருந்தபோது, அவரை எடுத்த புகைப்படத்தில் விவேகானந்தர் காட்சியளித்த தோற்றம் இது.



இயக்குகிறது. உடல் சீர்கெடாமல் வைத்திருக்கிறது.

பிராணாயாமம் செய்வது எப்படி என்பது குறித்து சுவாமி விவேகானந்தர் சொல்லியிருக்கிறார்.

பிராணாயாமத்தில் மூன்று பகுதிகள் உள்ளன.

1. பூரகம் - மூச்சை உள்ளே இழுத்தல்.

2. கும்பகம் - மூச்சை உள்ளே அடக்குதல்.

3. ரேசகம் - மூச்சை வெளியே விடுதல்.

சுவாசித்தல் என்னும் இந்த அவசியமான செயல் கால அளவு மீறாத ஒழுங்கோடு செய்யப்படவேண்டும். அதற்கு எளிய வழி எண்ணிக்கைதான். அது முற்றிலும் இயந்திரத்தனமான ஒன்று என்பதால் அதற்குப் பதிலாக 'ஓம்' என்னும் புனித மந்திரத்தை குறிப்பிட்ட முறை உச்சரித்துப் பிராணாயாமம் செய்யலாம்.

பெருவிரலால் வலது நாசியை அடைத்துக்கொண்டு, நான்குமுறை 'ஓம்' என உச்சரித்தபடியே மெதுவாக இடது நாசி வழியாக மூச்சை உள்ளே இழுங்கள்.

பிறகு ஆட்காட்டி விரலை இடது நாசி மீது வைத்து, இரு நாசிகளையும் அடைத்து, 'ஓம்' என எட்டுமுறை மனதால் உச்சரித்தபடி மூச்சை உள்ளே நிறுத்தி வையுங்கள்.

பின்னர், பெருவிரலை வலது நாசியிலிருந்து எடுத்து, 'ஓம்' என நான்கு முறை உச்சரித்தபடி மெதுவாக மூச்சை வெளிப்படுத்துங்கள்.

உள்ளே இழுத்த மூச்சு அத்தனையையும் வெளிப்படுத்த வேண்டுமென்பதால் மூச்சை வெளியே விடும்போது அடிவயிற்றை உள்ளிழுத்தபடி எல்லா மூச்சையும் வெளியேற்ற வேண்டும்.

மூச்சை உள்ளே இழுத்தல், உள்ளே அடக்குதல், வெளியே விடுதல் ஆகிய மூன்று செயல்களையும் செய்து முடித்தால் பிராணாயாமப் பயிற்சியை ஒருமுறை செய்திருக்கிறோம் என்றுபொருள்.



பெருவிரலால் வலது நாசியை அடைத்து ஒருமுறை இந்தப் பயிற்சியை முழுமையாகச் செய்தபின் ஆட்காட்டி விரலால் இடது நாசியை அடைத்து மறுமுறை இந்தப் பயிற்சியை முழுமையாகச் செய்யவேண்டும்.

முதல் வாரத்தில் இதுபோல் எட்டுமுறை பயிற்சி செய்யவேண்டும். அடுத்த வாரத்தில் மூச்சை இழுக்கும் கால அளவை ஆறுமுறை 'ஓம்' என்று உச்சரித்து அதிகப்படுத்த வேண்டும். மூச்சை அடக்கப் பன்னிரு முறை 'ஓம்' மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். மூச்சை வெளிப்படுத்தவும் ஆறு முறை 'ஓம்' உச்சரிக்க வேண்டும்.

நன்றாகப் பயிற்சி மேற்கொண்டபின் இந்தக் கால அளவை முடிந்த வரையில் அதிகப்படுத்தலாம்.

இந்தப் பிராணாயாமப் பயிற்சியானது நம் உடலைச் சீர்கெடாமல் வைத்திருக்கும். நம்மைத் தூய்மையானவர்களாக, புனிதமானவர்களாக மாற்றும்.

"உங்களால் யாருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாகச் சேவைதான் செய்ய முடியும்."

## விவேகம் ஒளிரும் விவேகானந்தர்

மிகவும் புகழ்பெற்ற சிகாகோ நகரில் விவேகானந்தரின் தோற்றம் இது. சர்வமத மகாநாடு நடைபெற்ற நாட்களில், ஏதோ ஒரு நாள் விவேகானந்தர் இப்படிக் கைகட்டிக் காட்சியளித்தபோது, புகைப்படக்காரர் ஒருவர் இந்தக் காட்சியைப் படம்பிடித்தார்.

சிகாகோவைச் சேர்ந்த கோஸ்லித்தோகிராஃபிக் கம்பெனி, விவேகானந்தரின் இந்தத் தோற்றத்தைச் சுவரொட்டியாகத் தயாரித்து, சிகாகோ முழுவதும் ஒட்டிவிட்டது! விவேகானந்தரின் கம்பீரமான இந்தத் தோற்றத்தால் கவரப்பட்ட மக்கள், சர்வமத மகாநாட்டில் அவர் ஆற்றும் உரையைக் கேட்கப் படை படையாகத் திரண்டு வரத் தொடங்கினார்கள்!





## எதிலும் வெல்ல...

1. மிக அதிகமாக உணவு உண்ணாதீர்கள்.
2. பட்டினி கிடக்காதீர்கள்.
3. அதிக நேரம் உறங்காதீர்கள்.
4. மிகக் குறைவாகவும் உறங்காதீர்கள்.
5. பொறாமை கூடவே கூடாது.
6. சந்தேகமும் சஞ்சலமும் எதிரிகள். அவற்றைத் துரத்தி அடியுங்கள்.
7. சோம்பலை ஒழித்துக் கட்டுங்கள்.
8. பேராசை கொள்ளாதீர்கள்.
9. உடல் தூய்மை அவசியம். தினமும் குளியுங்கள்.
10. நல்லவற்றை நினையுங்கள். நல்லவையே நடக்கும். நினைக்கும் பொருளாகவே ஆகும் தன்மை நம்மிடம் உண்டு என்பது சத்தியம்.
11. மகிழ்ச்சியாக இருங்கள்.
12. தைரியமாக இருங்கள்.
13. பொறுமையும், விடாமுயற்சியும் நமது நல்ல நண்பர்கள். எப்போதும் இவற்றுடனேயே இணைந்திருக்கப் பழகுங்கள்.
    வெற்றி உறுதி! உறுதி! உறுதி!

## கடவுளை எப்படி வழிபடவேண்டும்?

உடலாலும் மனத்தாலும் தூய்மையாக இல்லாத ஒருவன் கோயிலுக்கு வருவதும் கடவுளை வணங்குவதும் பயனற்றது. உடம்பாலும், மனத்தாலும் தூய்மையாக இருப்பவர்களின் பிரார்த்தனைகளை இறைவன் நிறைவேற்றுகிறார்.

தூய்மையற்ற உள்ளத்துடன் கோயிலுக்குச் செல்லும் ஒருவன், ஏற்கனவே இருக்கும் தன் பாவங்களுடன் மேலும் ஒன்றைக் கூட்டுகிறான்.

ஏழைகளிடமும் பலவீனமானவர்களிடமும் நோயுற்றவர்களிடமும் இறைவனைக் காண்பவனே உண்மையில் கடவுளை வழிபடுகிறான்.

கோயிலில் மட்டுமே வந்து தன்னைக் காண்பவனைவிட, மற்றவர்களிடம் இறைவனைக் காண்பவர்களிடமே இறைவன் அதிக மகிழ்ச்சி கொள்கிறார்.



ஒரு பணக்காரருக்குத் தோட்டம் ஒன்று இருந்தது. அதில் இரண்டு தோட்டக்காரர்கள். ஒருவன் சோம்பேறி, வேலை செய்யமாட்டான். ஆனால், எஜமானன் தோட்டத்துக்கு வந்துவிட்டால் உடனே அவரை எதிர்கொண்டு கைகூப்பிப் புகழ்ந்து அவர் முன் கைகட்டி நிற்பான்.

இன்னொருவன் உழைப்பாளி. பேசுவதே இல்லை. தன் கடின உழைப்பால் பழங்கள், காய்கறிகள் எனத் தன் உழைப்பினால் விளைவித்துப் பறித்து எஜமானன் வீட்டுக்குக் கொண்டுபோவான்.

இந்த இரு தோட்டக்காரர்களில் எஜமானன் யாரை அதிகம் விரும்புவார்? உழைப்பாளியைத்தானே?!

இறைவனும் இப்படியே.

சுயநலம் மிக்கவன், 'நானே முதலில் உண்பேன். எனக்கு மற்றவர் வைத்திருப்பதைவிட அதிகபணம் வேண்டும்' என்று சொல்பவன். சுயநலமற்றவன் மற்றவருக்காக வாழ்பவன்.

சுயநலம் கொண்டவன் எல்லாக் கோயில்களிலும் வழிபட்டிருந்தாலும், புண்ணியத் தலங்கள் அனைத்தையும் பார்த்திருந்தாலும், சிறுத்தையைப்போலவோ, புலியைப்போலவோ தன் உடல் முழுவதும் மதச்சின்னங்களைத் தீட்டிக் கொண்டிருந்தாலும் அவன் இறைவனிடமிருந்து விலகியே இருக்கிறான்.

"உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே உள்ளன."



## ஞானம் நல்கும் நல்ல நிகழ்ச்சிகள்

சிறுவயதில் நண்பர்களுடன் சேர்ந்து மற்றொரு நண்பன் வீட்டில் இருந்த மரத்தில் ஏறிக் கிளைகளில் காலை மடித்துபோட்டுத் தலைகீழாகத் தொங்குவது விவேகானந்தருக்குப் பிடித்தமான விளையாட்டு.

இந்த அபாயமான விளையாட்டிலிருந்து இவர்களை விடுவிக்க எண்ணினார் உறவினர் ஒருவர். எனவே, அவர் அந்த மரத்தில் பேய் ஒன்று வசிப்பதாகவும், மரத்தின் மீது ஏறுவோரின் கழுத்தை நெரித்து அது கொன்றுவிடும் என்றும் பயமுறுத்தி வைத்தார். மற்ற சிறுவர்கள் பயந்து போனார்கள்.



### சிகாகோ செயல்வீரர்!

சிகாகோ நகரில் நடைபெற்ற சர்வமத மகாநாட்டில் கலந்துகொள்ள, இந்தியாவின் பிரதிநிதியாக விவேகானந்தர் சென்றார். விவிதிசானந்தர், சச்சிதானந்தர் என்றெல்லாம் தம்மைக் கூறிக்கொண்ட சுவாமி, சிகாகோ சர்வமத மகாநாட்டில் கலந்துகொள்ளப் புறப்படும்போது, தன் பெயரை 'விவேகானந்தர்' என்று மாற்றிக்கொண்டார்!

சர்வமத மகாநாட்டு அரங்குக்குள் நுழையுமுன் விவேகானந்தர் இப்படித்தான் காட்சியளித்தார். வலதுகரத்தில் ஒரு காகிதச் சுருள். அணிந்திருந்த அங்கியின் இடது மார்புப் பகுதியில் அடையாள அட்டை!

ஆனால், விவேகானந்தரோ உறவினர் சொல்வதை மரியாதையுடன் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு அவர் தலை மறைந்தவுடன் முன்போல் மரத்தில் ஏறித் தலைகீழாகத் தொங்கினார். அவரை ஆச்சரியத்துடன் பார்த்த நண்பர்களிடம், "முட்டாள்களே... மரத்தில் அந்தக் கொடிய பேய் இருப்பது உண்மையானால் இத்தனை நாட்கள் நாம் விளையாடியபோதெல்லாம் நமது கழுத்தை நெரித்துக் கொண்டிருக்குமே" என்றார்.



"தனி மனிதனின் நிலை உயர்த்தப்பட்டால்,
தேசமும் உயர்வடைந்தே தீரும்."

**துணிந்து நில்!**

விவேகானந்தர் ஒருமுறை காசியில் உள்ள ஒரு கோயிலுக்குச் சென்று திரும்பியபோது குரங்குக் கூட்டம் ஒன்று அவரைத் துரத்தியது.

பெரிய பெரிய குரங்குகள் படையாகத் திரண்டு துரத்தியதும் விவேகானந்தர் பயந்து போனார். அவற்றிடமிருந்து தப்ப அவர் ஓடலானார்.

அவர் வேகமாக ஓடஓட குரங்குகளும் வேகமாகத் துரத்தின. அவற்றிடமிருந்து எப்படித் தப்புவது என்று அவர் யோசித்தபோது அவருடைய இதயத்தில் குருதேவரின் குரல் ஒலித்தது.

'குரங்குகளைக் கண்டு ஓடாதே. எதிர்த்து நில்'

விவேகானந்தர் துணிவு பெற்று நின்றார். திரும்பினார். குரங்குகளை முறைத்தார். குரங்குகளும் நின்றன. அவர் பார்வையில் இருந்த வீரத்தைக் கண்டு அவை மிரண்டு திரும்பி ஓட்டம் பிடித்தன.

'துரத்துகின்ற எதையும் எதிர்த்து நின்றால் வெற்றிகொள்ளலாம்' என்பதை இந்த நிகழ்ச்சி தமக்கு அறிவுறுத்தியதாக விவேகானந்தர் பின்னாளில் குறிப்பிட்டுள்ளார்.

**நம்பினோர் கெடுவதில்லை!**

விவேகானந்தர் ரயிலில் பயணம் செய்து கொண்டு இருந்தார். கடுங்கோடை. தாகம் நாக்கை உலர்த்தியது. ரயில் நிலையங்களில் காசு கொடுத்தால்தான் நீர் கிடைக்கும். விவேகானந்தர் காசு வைத்துக்கொள்ளும் வழக்கம் அற்றவர்.

விவேகானந்தர் இல்லம் (சென்னை)



அருகில் இருந்த ஒருவர், “சின்ன வயது... திடகாத்திர உடல். உழைத்துப் பிழைக்காமல் சாமியார் வேடம் போட்டிருக்கிறாயே?” என்று கண்டித்தார்.

ரயில் நிலையம் ஒன்று வந்தது. விவேகானந்தர் கீழே இறங்கி நின்றார்.

அப்போது அவ்வூரைச் சேர்ந்த ஒருவன் ஓடிவந்து விவேகானந்தரை வணங்கினான்.

“நான் இவ்வூரைச் சேர்ந்தவன். பகலில் நான் நித்திரையின்போது என் கனவில் ராமர் வந்து உங்கள் உருவத்தைக் காட்டினார். நீங்கள் பசியாக இருப்பதாகவும் உங்களுக்குப் பலகாரம் செய்து கொடுக்கும்படியும் கட்டளையிட்டார்” என்று கூறி கையில் கொண்டுவந்திருந்த உணவை ஓர் இலையில் வைத்து அவருக்குப் பரிமாறினான்.

இதைக் கண்டதும் விவேகானந்தரைக் கண்டித்த சகபயணி உடனே அவரைத் தொழத் தொடங்கினார்.

### தாழ்ந்தவன் இல்லை!

விவேகானந்தர் ஒருமுறை ராஜஸ்தானின் கேத்ரி சமஸ்தானத்தில் பயணம் செய்துகொண்டிருந்தார். மக்கள் அவரது போதனையைக் கேட்க வெள்ளம்போல் திரண்டு வந்தனர். அவர்களுக்கு முன்பாக மூன்று நாட்கள் இரவு-பகல் இடைவிடாமல் விவேகானந்தர் பேசினார். அந்த மூன்று நாட்களிலும் அவர் ஒரு வேளைகூட எதையும் உண்ணவில்லை.

மூன்றாம் நாள் இரவு. பசி மற்றும் களைப்பினால் அவர் சோர்ந்திருந்தார். அப்போது தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த ஏழை

### முதல் காட்சி!



லாலா கோவிந்த சகாய் என்னும் விவேகானந்தரின் பக்தர் ஒருவர். ஜெய்ப்பூரைச் சேர்ந்தவர். அவருக்கு விவேகானந்தரைப் புகைப்படம் எடுத்துப் பார்க்க வேண்டும் என்று ஆசை. ஒவ்வொரு முறையும் விவேகானந்தர் அனுமதி மறுத்தே வந்தார். கடைசியில், பக்தரின் அன்புப் பிடிவாதம் வென்றது. விவேகானந்தர் காமரா முன் நின்றார். விவேகானந்தர் முதன்முதலாக காமரா முன் காட்சியளித்தது இப்படித்தான்!

ஒருவர் விவேகானந்தரிடம் வந்தார். "சுவாமி, மூன்று நாட்களாக நீங்கள் சாப்பிடாமல் இருப்பதைக் கண்டு எனக்கு வருத்தமாக இருக்கிறது" என்றார்.

"சாப்பிட ஏதாவது தருகிறாயா?" என்று விவேகானந்தர் கேட்டார்.

அந்த ஏழை பதறினார். "சுவாமி. நான் அரிசி, பருப்பு, மாவு எல்லாம் கொண்டு வந்து தருகிறேன். நீங்கள் சமைத்துச் சாப்பிடுங்கள்" என்றார்.

விவேகானந்தர் சிரித்தார். "சந்நியாசி நெருப்பு மூட்டி சமைக்கக்கூடாது. நீ செய்ததை நான் உண்கிறேன். சரியான பசி. கொண்டு வா!" என்றார்.

சமஸ்தானத்து ராஜாவுக்கு இந்த விஷயம் தெரிந்தால் நிச்சயம் தண்டனைதான் என்று எண்ணிய அந்த ஏழை, தான் செய்த சப்பாத்திகளைக் கொண்டு வந்து கொடுத்தார்.

விவேகானந்தர் அவற்றை ஆர்வமாக உண்டார். அதற்கடுத்த நாளே சமஸ்தானத்து மகாராஜாவிடம் அந்த ஏழையின் செயலைக் கூறி அவரது வறுமையைப் போக்குவதற்கான வழியும் செய்தார் விவேகானந்தர்.



"எழுந்திருங்கள். விழித்துக் கொள்ளுங்கள்.
இனியும் தூங்க வேண்டாம்.
எல்லாத் துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல்
உங்களுக்குள்ளேயே இருக்கிறது."



விவேகானந்தர் பாறை (கன்யாகுமரி)


உங்கள் இல்லங்களில் நடைபெறும்
மங்கலகரமான நிகழ்வுகளிற்கு...
HARIKANAN CARDS
வடக்கின் பிரமாண்டமான காட்சியறை
உங்கள் வாழ்க்கைப் பயணம்
கரிகணன்
அழைப்பிதழில்
ஆரம்பிக்கட்டும்

Hoarding Specialist...




# High-Quality

## Digital Printing & Name Boards




- பெயர்ப் பலகைகள்
- மின்னொளி மூலமான பெயர்ப் பலகைகள் (லைற் போர்ட்ஸ்)
- டிஜிற்றல் பனர்கள்
- வாகன ஸ்ரிக்கர்கள்

நவீன அச்சுக்கலையின் முன்னோடி

# HARIKANAN

Printers of the North

Head Office:
#681, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.
0094-21-2222717 /18, 0094-21-7397530
(H) 0094-21-2222737 0094-21-2222891

www.harikanan.com
print@harikanan.com
harikanan.print
Harikanan Printers

Branch:
#175A, KARADIPPOKKU JUNCTION, KILINOCHCHI.
0094-21-2280000
printharikanan@gmail.com